**சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்.**
**முன்னிலை – திரு.எம்.ராமச்சந்திரன், பி.காம்.பி.எல்.,**
**சார்பு நீதிபதி, கொடுமுடி.**
**2025ம் வருடம் பிப்ரவரி மாதம் 19ம் நாள் புதன்கிழமை**
**2055 திருவள்ளுவராண்டு ஸ்ரீ குரோதி வருடம் மாசி மாதம் 7ம் நாள்**

இடைநிலை மனு எண்.5/2024
அசல் வழக்கு எண். 137/2024

பார்வதி
(represented by power agent P. Subramani)

.. மனுதாரர்/வாதி

// எதிர் //

1. K.M. ராஜ்குமார்
2. D. ரவி
3. T. சண்முகசுந்தரம்
4. கிராம நிர்வாக அலுவலர்,
(நஞ்சை கிளாம்பாடிகிராமம், கொடுமுடி.)
5. மண்டல துணை வட்டாட்சியர், கொடுமுடி.
6. சார் பதிவாளர், கொடுமுடி.
7. மாவட்ட பதிவாளர், ஈரோடு.
8. தமிழ்நாடு அரசுக்காக மாவட்ட ஆட்சியர், ஈரோடு.

.. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

கடந்த 09.12.2024 ஆகிய தேதியிட்ட இம்மனு உ.வி.மு.ச. கட்டளை 6, விதி 17ன்படி மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டு, மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு தாவாவை திருத்தம் செய்ய அனுமதிக்க வேண்டுமென்று கோரப்பட்டுள்ளது.

இம்மனு 31.01.2025ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, மனுதாரர் தரப்பில் திரு.V.M.நடராஜன் வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் திரு. P. பாஸ்கரன் வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 1, 3 முதல் 8 எதிர்மனுதாரர்கள் அழைத்தும் ஆஜராகாததால் ஒருதலைப்பட்சப்–

படுத்தப்பட்டுள்ளார்கள். 3ம் எதிர்மனுதாரர் இறந்தவர். இருதரப்பு வாதுரை கேட்டும், இதுநாள்வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து, மனு கோப்பைப் பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

தாவாவை திருத்தம் செய்ய அனுமதி கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2.மனு உரையின் சுருக்கம்:**

2.1. மனுதாரர் மேற்படி அசல் வழக்கை தனது முதல்வருக்காக பொது அதிகாரம் பெற்ற முகவர் என்ற கோதாவில் தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர்களான அரசு அதிகாரிகள் 1, 2 எதிர்மனுதாரர்களின் நேர்மையற்ற தவறான தூண்டுதலின்பேரில் 30.04.2021 தேதியிட்ட கிரைய ஆவணத்தை பதிவு செய்வதற்கு உரிய சான்றுகள் வழங்க மறுத்து வருகிறார்கள். அதனால் வாதிக்கு மன வேதனை ஏற்பட்டுள்ளது.

2.2. வாதி கோரிய சான்று வழங்காதது சட்ட விரோதமானது. ஆகையால் அசல் வழக்கானது செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் மற்றும் இழப்பீடு கோரி தாக்கல் செய்துள்ளார். மேற்படி அசல் வழக்கில் வாதிக்காக சாட்சிய பிரமாண வாக்குமூலம் தயார் செய்தபோது பட்டா பெயர் மாற்றம் சம்மந்தமான சில நுட்பமான சங்கதிகளை குறிப்பிட்டுள்ளார். மேலும் மனுதாரரின் முதல்வர் உரிய அதிகார அமைப்பின் முன்பாக பட்டா பெயர் மாற்றம் செய்வது சம்மந்தமாக உரிய நடவடிக்கை எடுக்க இருப்பதால் நுட்பமான சங்கதிகளை பொறுத்து குறைபாடு ஏற்படுவதை தவிர்க்க தாவாவை திருத்தபாடு செய்ய வேண்டி உள்ளது. தாவாவை திருத்தப்பாடு செய்ய அனுமதிக்க வேண்டுமென்றும் இல்லையேல் மனுதாரருகவு ஈடு செய்ய முடியாத இழப்பு ஏற்படும்.

**<u>3. 1ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்.</u>**

மனுவில் கண்டுள்ள சங்கதிகள் எல்லாம் தவறானவை. மனுதாரர் மனுவில் கோரியுள்ள திருத்தப்படானது நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர் திருத்தப்பாடு மூலமாக கோரும் பரிகாரமானது வருவாய் துறையினரிடம் இருப்பதாகவும், வருவாய் துறையினரால் மனுதாரருக்கு ஏதேனும் குறைவு ஏற்படுமாயின் வருவாய்துறை மேல்முறையீட்டு அதிகார அமைப்பிடம் மனு செய்து கொள்ளலாம். மனுதாரர் வருவாய் துறையினரிடமோ அல்லது வருவாய் துறை மேல்முறையீட்டு அதிகாரி அமைப்பிடமோ எந்த மனுவும் செய்யப்படாததால் மனுதாரர் கோரும் திருத்தப்பாடு நிலைக்கத்தக்கதல்ல என்பதால் எடுதத எடுப்பிலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4. இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

**5.<u>பிரச்சினைக்குத் தீர்வு:</u>**

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர் மேற்படி அசல் வழக்கை தனது முதல்வருக்காக பொது அதிகாரம் பெற்ற முகவர் என்ற கோதாவில் தாக்கல் செய்துள்ளதாகவும், எதிர்மனுதாரர்களான அரசு அதிகாரிகள் 1, 2 எதிர்மனுதாரர்களின் நேர்மையற்ற தவறான தூண்டுதலின்பேரில் 30.04.2021 தேதியிட்ட கிரைய ஆவணத்தை பதிவு செய்வதற்கு உரிய சான்றுகள் வழங்க மறுத்து வருவதாகவும், அதனால் வாதிக்கு மன வேதனை ஏற்பட்டுள்ளதாகவும் வாதி கோரிய சான்று வழங்காதது சட்ட விரோதமானது என்றும் ஆகையால் அசல் வழக்கானது செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் மற்றும் இழப்பீடு கோரி தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி அசல் வழக்கில் வாதிக்காக சாட்சிய பிரமாண வாக்குமூலம் தயார் செய்தபோது பட்டா பெயர் மாற்றம் சம்மந்தமான சில நுட்பமான சங்கதிகளை குறிப்பிட்டதாகவும், மேலும் மனுதாரரின் முதல்வர் பட்டா

உரிய அதிகார அமைப்பின் முன்பாக பட்டா பெயர் மாற்றம் செய்வது சம்மந்தமாக உரிய நடவடிக்கை எடுக்க இருப்பதால் நுட்பமான சங்கதிகளை பொறுத்து குறைபாடு ஏற்படுவதை தவிர்க்க தாவாவை திருத்தபாடு செய்ய வேண்டி உள்ளதாகவும், நீதியை நிலைநிறுத்த வேண்டி தாவாவை திருத்தப்பாடு செய்ய அனுமதிக்க வேண்டுமென்றும் இல்லையேல் மனுதாரருககு ஈடு செய்ய முடியாத இழப்பு ஏற்படும் என்றும் பிந்தைய திருத்தப்பாட்டினால் எதிர்மனுமாரர்களுக்கு எவ்வித குந்தகமும் ஏற்பட போவதில்லை என்பதால் மனு அனுமதிக்கப்பட வேண்டும் என்று வாதிடப்பட்டது.

6. எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் மனுவில் கண்டுள்ள சங்கதிகள் எல்லாம் தவறானவை என்றும், மனுதாரர் மனுவில் கோரியுள்ள திருத்தப்படானது நிலைக்கத்தக்கதல்ல என்றும் மனுதாரர் திருத்தப்பாடு மூலமாக கோரும் பரிகாரமானது வருவாய் துறையினரிடம் இருப்பதாகவும், வருவாய் துறையினரால் மனுதாரருக்கு ஏதேனும் குறைவு ஏற்படுமாயின் வருவாய்துறை மேல்முறையீட்டு அதிகார அமைப்பிடம் மனு செய்து கொள்ளலாம் என்றும் மனுதாரர் வருவாய் துறையினரிடமோ அல்லது வருவாய் துறை மேல்முறையீட்டு அதிகாரி அமைப்பிடமோ எந்த மனுவும் செய்யப்படாததால் மனுதாரர் கோரும் திருத்தப்பாடு நிலைக்கத்தக்கதல்ல என்பதால் எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் பிந்தைய திருத்தப்பாடாது தாவாவின் தன்மை மற்றும் அதன் நடத்தையை மாற்றிவிடும் என்றும் ஆவண பதிவு சம்மந்தமாகவும், வருவாய் துறையினரிடம் தீர்வு காணவும் பிந்தைய திருத்தப்பட்டின் மூலம் இவ்வழக்கில் பரிகாரம் கோருவது நிலைக்கத்தக்கதல்ல என்றும் மனுவில் கண்டுள்ள சங்கதிகளை ஊரிஜிதப்படுத்த ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்பதால் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று எதிர்வாதம் செய்யப்பட்டது.

7. 1, 2 எதிர்மனுதாரர்கள் அரசு அதிகாரிகளான இதர

எதிர்மனுதாரர்களுக்கு வழங்கிய தவறான மற்றும் நேர்மையற்ற வலியுறுத்தலின்பேரில் வாதியால் 30.04.2021 தேதியிட்ட கிரைய ஆவணத்தை மனுதாரர் பெயரில் பதிவு செய்வதற்கு உரிய சான்றுகள் வழங்க மறுத்துட்டதாகவும், எதிர்மனுதாரர்களின் செயலினால் வாதிக்கு மன வேதனை ஏற்பட்டுள்ளதால் வாதி தனது முகவரான மனுதாரருக்கு பொது அதிகாரம் வழங்கப்பட்டு அசல் வழக்கானது செயலுறுத்துக் கட்டளை மற்றும் நஷ்ட ஈடு கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மனுதாரர் வாதிக்காக சாட்சியம் அளிக்கும் பொருட்டு முதல் விசாரணை தயார் செய்தபோது மனுதாரரின் வழக்கறிஞர் பட்டா பெயர் மாற்றம் சம்மந்தமான நுட்பமான சங்கதியை பொறுத்து தெரிவித்ததாகவும், மனுதாரின் முதல்வர் பட்டா பெயர் மாற்றம் சம்மந்தமாக உரிய அதிகாரிகள் முன்பாக தகுந்த நடவடிக்கை எடுக்க இருப்பதால் நுட்பமான சட்ட குறைபாட்டை தவிர்க்கும் பொருட்டு தாவாவை திருத்தப்பாடு செய்ய வேண்டும் என்று கோரப்பட்டுள்ள நிலையில் மேற்படி பிந்தைய திருத்தத்தை பொறுத்து எதிர்மனுதாரர் தரப்பில் மறுப்பு தெரிவித்து மனுதாரர் கோரும் திருத்தப்பாடு சம்மந்தமான பரிகாரம் எல்லாம் வருவாய் துறையினரிடம் இருப்பதாகவும்மனுதாரர் வருவாய் துறையினரை அணுகாமல் நேரடியாக இந்த வழக்கில் பரிகாரம் கோருவது ஏற்புடையதல்ல என்றும் பிந்தைய திருத்தப்பாடானது வழக்கின் தன்மையை மாற்றிவிடும் என்று ஆட்சேபணை தெரிவித்துள்ளபோதும் மனுதாரர் பெயருக்கு வாதியால் 30.04.2021 தேதியிட்ட கிரைய ஆவணத்தை பதிவு செய்து கொடுக்கும் பொருட்டு உரிய சான்றுகள் வழங்க கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாலும் வழக்குரையில் மனுதாரர் கோரும் பிந்தைய திருத்தப்பாடு குறித்து வாதுரைக்கப்பட்டுள்ளதால் மனுதாரர் கோரும திருத்தப்பாடை அனுமதிப்பதால் வழக்கின் தன்மையானது எந்த விதத்திலும் மாறப்போவதில்லை என்றும்

8. மேலும் வழக்கு நிலுவையில் இருப்பதால் மனுதாரர் அரசு

அதிகாரிகளான 4 முதல் 8 எதிர்மனுதார்களிடம் மனு செய்யும் பட்சத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதை காரணம் காட்டி மனுதாரர் கோரிக்கையானது நிராகரிக்கப்பட வாய்ப்பு உள்ளதாலும் மனுதாரர்களின் கோரிக்கையானது 30.04.2021 தேதியிட்ட கிரைய ஆவணத்தை வாதியால் மனுதாரர் பெயருக்கு பதிவு செய்து கொடுப்பதற்கு உரிய ஆவணங்கள் வழங்க கோரி வழக்கில் பரிகாரம் கோரப்பட்டுள்ளதால் இம்மனுவானது அனுமதித்து தாவாவில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ள போதுமான முகாந்திரம் உள்ளதாக முடிவு செய்யப்படுகிறது.

முடிவாக, இந்த மனுவை அனுமதித்து இந்நீதிமன்றம் உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு ஒலி வடிவில் சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2025ம் வருடம் பிப்ரவரி மாதம் 19ம் நாள் அவையறிய திறந்த இந்நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

M RAMACHANDRAN

Digitally signed by M RAMACHANDRAN
Date: 2025.02.19 17:46:29 +0530

சார்பு நீதிபதி,
கொடுமுடி.

<u>சாட்சிய சான்றாவணப் பட்டியல்</u>

(இருதரப்பிலும் .. தாக்கல் இல்லை.. )

M RAMACHANDRAN

Digitally signed by M RAMACHANDRAN
Date: 2025.02.19 17:46:36 +0530

சார்பு நீதிபதி,
கொடுமுடி.